# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,417, DECEMBER 23, 1910.


## TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation relating to Amendment of Municipal By-laws, Galle.]

பெரிய பிரித்தனும் அயர்லாந்துமாகிய ஐக்கிய இராட்சியத்துக்கும் கடலுக்கப்பாலுள்ள பிரிட்டிஷ் அதிபத்திய நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகருமாகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ச் அவர்களின் நாமத்தினாலே:

மகாமேன்மைபொருந்திய சென்மைக்கேல் அன் சென் ஜோர்ஜின் வரிசையின் கிரான்ட் குரோஸ் நயிட்
பட்டவர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சேர்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும்
ஆகிய உத்தமனார் சேர் ஹென்றி எட்வட் மக்கலம் அவர்கள் செய்யும்

### விளம்பரம்.

ஹென்றி மக்கலம்.

காலி நகராதிகார சங்கத்தாரால் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்களின் 6 ம் அதிகாரத்தினுள்ளவைகளும் 1903 ம் ஆண்டு ஜனவரிமீ 21 ந் தேதியில் விளம்பரிக்கப்பட்டவைகளுமாகிய துணைப்பிரமாணங்களானவை, இதனோடு அணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டப்பட்டவைகளும், இனிமேல் முறையே 30 ம், 31 ம், 32 ம் துணைப்பிரமாணங்களென அறியப்படுவனவைகளுமாகிய துணைப்பிரமாணங்களைச் சேர்ப்பதினால், திருத்திப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றபடியால்;

மேற்சொன்ன இலங்கைத் தேசாதிபதியாகிய நாம், "1910 ம் ஆண்டின் (6 ம் இலக்க) நகராதிகார சட்டத்தின்" 109 ம் பிரிவின் (3) ம் கீழ்ப்பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைச் செலுத்தியும், அதிகார மந்திரசபையாரது ஆலோசனையோடும், இதனோடு அணைத்திருக்கும் அட்டவணையிற் காட்டிய மேற்படி துணைப்பிரமாணங்களை இத்தாற் பெலப்படுத்தி விளம்பரிக்கிறோம் என்றும், 1910 ம் ஆண்டு மீ தேதி முதலாகவும் அதன்பின்பும் அவை வழங்கப்படுமென்று வெளிப்படுத்துகிறோமென்றும், நீவிர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டு டிசெம்பர்மாசம் இருபதாந் தேதியாகிய இத்தினத்திலே, மேற்படி இலங்கைத்தீவிலே, கொழும்பிலே கொடுக்கப்பட்டது.

உத்தமனாரவர்கள் கட்டளைப்படி,
எச். எல். கிறவ்வோட்,
அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

இராசாவைத் தேவன் ரக்ஷித்தருள்க.

---

சுட்டிய அட்டவணை.

VI. ம் அதிகாரத்திற் சேர்க்கவேண்டிய துணைப்பிரமாணங்கள்.

மேற்படி கடைகள் தாபித்தலும் நடத்துதலும்.

30. எவ்விதமான வள்ளங்களில் பிடித்தாவது நகரசங்க எல்லைக்குள் கடல் அருகில் கரையிடும் புது மீன்கள் உடையவர் காலிக் கடையிலிருக்கும் மீன் ஏலத்தலத்துக்கு கொண்டுபோக கடமை.

31. அப்படிக் கொண்டுவரும் மீன்களை ஏலத்தலத்தில் குத்தகைக்காரர்களால் விற்று வருமதியில் நூத்துக்கு நாலு வீதம் ஏலக்காரர்களுக்கு அறவிட தத்துவமிருக்கிறது.

32. முன்சொல்லப்பட்ட பிரகாரம் ஏலத்தில் விப்பனவுபண்ணாத எந்தவித புது மீன்களை காலி நகரசங்க எல்லைக்குள் நகரசங்க தலைவரால் உத்தரவு இல்லாமல் விற்பனவுபண்ணக்கூடாது.

---

[Kirinde-oya (Tissamaharama) Scheme, Cultivation Rules.]

கிரிண்டைஓயாவின் கீள்உள்ள நீர்ப்பாச்சல் இடங்களின் வேளாண்மைச்சட்டம்.

1. மேலே குறித்த நீர்ப்பாச்சலுக்குரிய நீர்நிலைகளின்கீள் வேளாண்மைச்செய்கை காலபோகம் கோடைப்போகம் என இருவகைப்படும்.

2. கோடைப்போக வேளாண்மைச்செய்கை மார்ச்சுமாதம் 15 ந் திகதி தொடக்கம் மேமாதம் 15 ந் திகதிவரையிலும், காலபோக வேளாண்மை ஒக்ரோபர்மாதம் 1 ந் திகதி தொடக்கம் நவம்பர்மாதம் 30 ந் திகதி வரைக்கும் நடைபெறும். விதைத்த நாள்முதல் 60 நாட்களுக்குள் வெட்டத்தக்க நெல்லொளிய வேறு நெல் கோடைப்போகத்துக்கு விதைக்கப்படாது. உதவி கவர்ண்மென்ற் ஏசண்டுத்துரையவர்கள் தாம் அவசியமென்று நினைக்கில் பதினைந்து நாள் கூடக்கொடுக்கலாம்.

3. உதவி கவர்ண்மென்ற் ஏசண்டுத்துரை அவர்களால் விலக்கப்பட்ட நிலங்கள் தவிர மற்றய நிலங்கள் ஒவ்வொன்றும் உழப்பட வேண்டும் அல்லது மண்வெட்டியால் கொத்தப்பட வேண்டும். உழப்பட்ட அல்லது கொத்தப்பட்ட நிலங்களை ஒப்பரவாக்குவதற்கேயல்லாமல் சேறடிப்பதற்கென்று மாடுகளை உபயோகிக்கப்படாது.

4. விதைத்துமுடிகிறதற்கு நியமிக்கப்பட்ட நாள்வரைக்கும் மாடுகளைச் சொந்தக்காரருடைய நிலங்களில் வைத்திருக்கலாம். விதைத்துமுடிந்த அடுத்த நாளிலேயே எல்லா ஆடுமாடுகளும் விதைக்கப்பட்ட இடங்களிலிருந்து இரண்டு மைல் தூரத்திற்கு அப்புறம் கொண்டுபோகப்படவேண்டும், கட்டிமேய்க்கப்படவேண்டும், அல்லது அடைப்புக்குள் விடப்படவேண்டும்.

5. வெல்விதானையால் நியமிக்கப்பட்டபடி வயற்பாதுகாப்புக்காக வேளாண்மைசெய்வோர் காவற்குடில் கட்டி அந்தந்தப் பகுதிக்குரிய வேளாண்மை முழுதும் வெட்டிமுடியும்வரையும் ஒழுங்காகவைத்துக் காவல்காற்க வேண்டும்.

6. வயற்சொந்தக்காரர் விதைத்துப் பதினைந்து நாட்களுள் நீர்ப்பாச்சல் பிரதான தலைமைக்காரனுக்கு வயற்செய்கைக்காரரின் பெயரும் ஒவ்வொருவரின் விதைப்புக்கணக்குமடங்கிய ஒரு டாப்புக் கொடுக்க வேண்டும்.

7. வயற்பாதுகாவலரின் அனுமதியில்லாமலும் நீர்ப்பாச்சல் பிரதான தலைமைக்காரனுக்கு அறிவியாமலும் ஒரு வயற்செய்கைக்காரனுக்காகப் பதில் ஆள் வைக்கக்கூடாது.

8. வயற் சொந்தக்காரன் செய்கைக்காரனுக்குக் கொடுக்கவேண்டியதை வேளாண்மை முடிந்தவுடன் வயலிலேயே கொடுக்க வேண்டும்.

9. நீர்ப்பாச்சல் தலைமைக்காரனுக்கு ஒரு அவுணம் விதைப்புக்கு மூன்று குறுணி வீதம் நெல்லுக் கொடுத்துப் பற்றிச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. சொந்தககாரன் அல்லது செய்கைக்காரன் தண்ணீர் தேள்வையானால் அல்லது தேள்வையில்லாவிட்டால் வெல்விதானைக் கறிவிக்க வேண்டும். அவ் வெல்விதானை நீர்ப்பாச்சல் சுப்பிறின்றெண்டனுக்கு எழுதி அறிவிக்க வேண்டும். அக்கேள்விக்கடதாசியில் எந்தப் பகுதிகென்றும் விசால மெவ்வளவென்றும் காட்டப்பட வேண்டும். ஒவ்வொரு வேளாண்மைக்கும் வெல்விதானை இவைகளில் ஒவ்வோர் கொப்பி வரிசையாக நம்பர்போட்டு வைத்திருக்க வேண்டும்.

11. வளக்கமாகஉள்ள முழு வயல்களையும் செய்கைபண்ண தண்ணீர் எப்போதாகிலும் போதாதிருந்தால் நீர்ப்பாச்சல் உத்தியோகஸ்தர் உதவி கவர்ண்மென்ற் ஏசன்றுத்துரை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அந்த உதவி கவர்ண்மென்ற் ஏசன்றுத்துரையவர்கள் எவ்வளவு நிலம் விதைக்கலாமென்றும் எந்த எந்த நிலம் விதைக்கப்பட வேண்டுமென்றுந் தீர்மானிப்பரர். வேறு எந்த வயலையாவது விதைப்பது கட்டளைக்கு விரோதமாகும்.

---

[Walawe Cultivation Rules.]

## வளவை நீர்ப்பாச்சல் இடங்களின் வேளாண்மைச் சட்டம்.

1. மேற்குறித்த நீர்ப்பாச்சலுக்குரிய நீர்நிலைகளின்கீள் வேளாண்மைச்செய்கை காலபோகம் கோடைப்போகமென இருவகைப்படும்.

2. கோடைப்போக வேளாண்மைச்செய்கை மார்சமாதம் 12 ந் திகதிக்கும் மேமாதம் 1 ந் திகதிக்கும் இடையிலும், காலபோகம் செப்றெம்பர்மாதம் 9 ந் திகதிக்கும் நவெம்பர்மாதம் 9 ந் திகதிக்கும் இடையிலும் நடைபெறும்.

3. செப்றெம்பர்மாதம் 9 ந் திகதிககும் ஒகரோபர்மாதம் 9 ந் திகதிக்குமிடையில் விதைத்து 105 நாட்களுக்குமேல் தண்ணீர் தேள்வையில்லாத நெல் விதைக்கப்படவேண்டும்—வேறு எந்த நேரத்திலாவது விதைக்கப்படும் நெல் 90 நாட்களுக்குமேற் தண்ணீர் தேள்வையில்லாததாக இருக்கவேண்டும்.

4. விதைப்பு முடியவேண்டுமென்று நியமிக்கப்பட்ட நாள்வரைக்கும் மாடுகளைச் சொந்தக்காரரின் நிலங்களில் வைத்திருக்கலாம். விதைப்புமுடிந்த மறுநாளிலேயே எல்லா ஆடுமாடுகளும் விதைக்கப்பட்ட இடங்களிலிருந்து இரண்டு மைல் தூரத்துககப்புறம் கொண்டுபோகப்படவேண்டும், அல்லது கட்டி மேய்க்கப்படவேண்டும்.

5. வெல்விதானையால் நியமிககப்பட்டபடி செய்கைக்காரர் தங்கள் வயற் பாதுகாப்புக்காக விதைப்பு நிலத்திற்குத் தக்கபடி வேலியுங் காவற்குடிலுங் கட்டவேண்டும். அப்படிக் கட்டப்பட்ட வேலி காவற்குடில் இவைகளைப் பழுது பார்த்து வேளாண்மை முடியும்வரைக்குங் காவலுங் காக்கவேண்டும். ஏதாவது ஒரு பிரிவிலுள்ள வயல்களுள் ஒரு வயல் விதையாமல் விடப்பட்டாலும் அந்த வயலுககாக அவ்வயற் சொந்தக்காரன் வேலி அடைக்க வேண்டும். ஆராவது தங்கள் பங்குவேலி அல்லது காவற்குடில் கட்டிமுடியாவிட்டால் வெல்விதானை அந்த வேலையைமுடித்து வேலைசெய்யாதவர்களிடம் அந்தச் செலவை அறவிடவேண்டும்.

6. வயற் சொந்தககாரன் விதைத்துப் பதினைந்து நாட்களுக்குள் நீர்ப்பாச்சல் பிரதான தலைமைக்காரனுக்கு செய்கைக்காரின் பெயரும் அவரவர்செய்கைபண்ணும் காணியின் விசாலமு மடங்கிய ஒரு டாப்புக் கொடுக்கவேண்டும்.

7. வயற்பாதுகாவலரின் அனுமதியில்லாமலும் நீர்ப்பாய்ச்சல் பிரதான தலைமைக்காரனுக்கு அறிவியாமலும் ஒரு செய்கைக்காரனுககாகப் பதில்ஆள் வைக்கக்கூடாது.

8. சொந்தக்காரன் செய்கைக்காரனுககுக் கொடுக்கவேண்டியதை அவ்வவ் வேளாண்மை முடிந்தவுடன் வயலிலேயே கொடுக்கவேண்டும்.

9 நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரனுக்கு ஒரு அமுணம் விதைப்புக்கு ஒரு குறுணி வீதம் நெல்லுக் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. சொந்தக்காரன் அல்லது செய்கைக்காரன் தண்ணீர் தேள்வை அல்லது தேள்வையில்லாத காலத்தில் வெல்விதானைக்கு அறிவிககவேண்டும். அவ் வெல்விதானை இறிகேசன் சுப்பிறின்றெண்டனுககு எழுதி யறிவிககவேண்டும். அந்தக் கடிதத்தில் எந்தப் பகுதிகென்றும் அதின் விசால மிவ்வளவு என்றும் காட்டப்படவேண்டும். வெல்விதானை இக்கடிதத்தின் கொப்பிகள் ஒவ்வொரு வேளாண்மைக்கும் வெவ்வேறாக ஒழுங்காக இலக்கமிட்டு வைத்திருக்கவேண்டும்.

---

[Notification regarding Irrigation Scheme, Kirinde-oya (Tissamaharama) and Walawe.]

"1906 ம் ஆண்டின் (16 ம் இலக்க) நீர்ப்பாய்ச்சற் சட்டம்."

மேற்சொல்லிய சட்டத்தின் 56 ம் பிரிவின்படி வெளிப்படுத்திய 1908 ம் ஆண்டு செப்றெம்பர்மாசம் 24 ந் தேதியைக்கொண்ட விளம்பரத்தினாலே; (திசமகாரம) கிறிந்தஓயாவும் வலவையும் என்ற நீர்ப்பாய்ச்சல் வேலைகள் நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைமைத்துரையது அதிகரிப்பு விசாரணைகளின்கீழ் வைக்கப்பட்டன; ஆதலால்,

இத்தால் அறிவிப்பது யாதெனில்:—மேற்சொன்ன பிரிவின் (3) ம் கீழ்ப்பிரிவின்படி கருமம் பார்ப்பவராகி, நீர்ப்பாய்ச்சற் பகுதித் தலைமைத்துரையானவர், தென்மாகாணத்துக் கவண்மேந்து ஏஜன்றர்துரையோடு ஆலோசனைபண்ணிக்கொண்டபின்பு, மேற்படி நீர்ப்பாய்ச்சல் வேலைகளைப்பற்றிய இதனோடிணைத்திருககும் அட்டவணையிற் காட்டிய பிரமாணங்களை உண்டாக்கினர்; மேலும், மேற்படி கீழ்ப்பிரிவின் ஏற்பாடுகளின்படி, அப்பிரமாணங்கள் அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களால் அங்கீகரிககப்பட்டிருககின்றன.

உத்தமனார் கட்டளைப்படி,

எச். எல். கிறுவோட்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிடேத்தார் கந்தோர்,
கொழும்பு, 1910 ம் ஹூ டிசம்பர்மீ 17 ந் உ.

## கிரிண்டைஓயா (திசமகாரம) நீர்ப்பாய்ச்சல் உபாயம்.

## நீர்ப்பாய்ச்சல்த் தலைவரின் பிரமாணங்கள்.

1. விதைப்புக் காலங்களுக்கிடையில் நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்தலுஞ்செய்யவும் பராமரிக்கவும் பின்னாற் சொல்லப்படும் காலவிடைகள் வேண்டியதாயிருககின்றன. அக்காலங்களில் எந்த மதகுகளுககூடாகவேனும், அல்லது எந்த கால்வாய்களுககூடாகவேனும் வயல்களுக்குப் பங்கீடுசெய்வதற்காகத் தண்ணீர் விடப்படமாட்டா.

அககால விடைகளாவன:—

| | | |
|---|---|---|
| "மகா", "யாலா" வேளாண்மைப் போகங்களுக்கிடையில் | .. | .. 15 நாட்களும் |
| "யாலா" "மகா" வேளாண்மைப் போகங்களுக்கிடையில் | .. | .. 55 நாட்களும் |
| | ஆகக்கூடியது | .. 70 நாட்கள் |

நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அந்த அந்த விடத்து வேளாண்மைப் பிரமாணங்களால் அக்காலவிடைகள் தொடங்கவேண்டிய சரியான திகதிகள் குறிக்கப்படும்.

2. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின்படி குளங்களுக்குப் பாதுகாவலனுயிருப்பவரால் மதகுகளிலிருந்தும் இராசாங்க கால்வாய்களிலிருந்தும் தண்ணீர் வெளியாகவிடுதல் பிரமாணப்படுத்தப்படவேண்டியது. அவ்வுத்தியோகத்தர் அல்லது அவ்வுத்தியோகத்தரால் பதிலாக நியோகிக்கப்பட்ட இன்னொருவரேயல்லாமல் மற்றையோர் ஒரு குளத்தின் மதகுகளில் அல்லது கால்வாய்களில் அல்லது அவைகளிலிருந்து வெளியேவிடப்பட்ட தண்ணீரில் தலையிடுதல் கூடாது.

3. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் இராசாங்க கால்வாய்களிலிருக்கும் மதகுகளிலிருந்து பங்கீடுசெய்யப்படுந் தண்ணீர் பிரமாணப்படுத்தப்படவேண்டும். அவ்வுத்தியோகத்தர் வெளியேவிடப்பட்ட தண்ணீர் விணிலேபாயாது தடுத்தற்குத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

4. தங்கள் தங்கள் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சற்குத் தேவையான சிறு கால்வாய்களின் பங்குகளை வெட்டுவித்தல் இராசாங்கக் கால்வாயால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரர்களின் கடனாகும். ஒவ்வொரு சொந்தக்காரனுக்கும் உரித்தாய் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலத்தின் ஏக்காத தொகைக்குத் தக்கபடி நீர்ப்பாய்ச்சல்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் ஒவ்வொரு சொந்தக்காரனால் கட்டுவிக்கப்பட வேண்டிய கால்வாய்களின் வலிகளும் பகுதிகளும் அவற்றின் விவரங்களும் தீர்மானிக்கப்படவேண்டியது. எப்பொழுது எவ்விடத்தில் அவ்விதமான கால்வாய்கள் தேவையென்று மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் அறிவித்தல் செய்யவேண்டும்.

5. சிறு கால்வாய்கள் அல்லது வயற்கால்வாய்களால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரரால் அக்கால்வாய்கள் நல்ல நிலைபரத்தில் வைத்துப் பராமரிக்கப்படவேண்டியது. அச்சொந்தக்காரர்களுக்கு ஒவ்வொரு விதைப்புக் காலத்துக்கு முன்பாகத் தங்கள் தங்கள் கால்வாய்களைத் துப்பரவுசெய்வித்தலும் விதைப்பு முடிகிறவரையில் அவைகளைத் துப்பரவாகவைத்துப் பராமரித்தலும் கடமையாகும்.

யாதாமொரு சொந்தக்காரன் கால்வாய்களின் தனக்குரிய பங்கைத் துப்பரவுசெய்யத் தவறுங் காலத்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அவ்விதமான திருத்தம் அல்லது பராமரிப்பு ஆவசியகமென்று அறிவித்தல்செய்தால் அவ்வேசண்டர் அல்லது உதவி ஏசண்டர் அவ்வேலைகளைச்செய்வித்து அச்செலவைத் தவறிப்போன சொந்தக்காரனிடத்து அறவிடலாம்.

6. நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரின் கட்டளையின்றி யாதாமொரு கால்வாயிலேனும் அணைகட்டப்படக் கூடாது.

7. நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின் 56 (1) ம் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரர்கள் அச்சட்டத்தின் 8 ம் பிரிவில் விதித்திருக்கும் பிரகாரம் தெரிவுசெய்யப்பட வேண்டும். நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் இராசாங்கக் கால்வாய்களால் அல்லது வேறு வழிகளால் கொடுக்கப்பட்ட தண்ணீரைத் தங்கள் தங்கள் பொறுப்பிலிருக்கும் வயல்களுக்கு அல்லது வயல்பகுதிகளுக்குச் சரியாகப் பங்கீடுசெய்தல் அத்தலைமைக்காரரின் கடமையாயிருக்கும். அவர்கள் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டரின் ஆஞ்ஞையின் கீழிருப்பார்கள், அவ்வேசண்டர் அவர்களை வேலையின்றும் நீக்கலாம்.

8. நீர்ப்பாய்ச்சலுக்காகத் தண்ணீர் சேமிக்கப்பட்டிருக்கு மிடங்களில் நீர்ப்பாய்ச்சல்த் தலைவருக்கு அல்லது அவரால் நியோகிக்கப்பட்ட அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்திருக்குத் தண்ணீர் ஒரு போகத்துக்குமேல் விதைக்கப் போதுமானதல்ல, அல்லது போதுமானதா யிருக்கமாட்டாது என்று தோற்றினாலும், அல்லது ஒரு போகத்துக்குத்தானும் நீர்ப்பாய்ச்சக்கூடிய முழு நிலத்துக்கும் போதுமானதல்லவென்று தோற்றினாலும், அதுகாரணம்பற்றி விளம்பரஞ்செய்தல் ஆவசியகமென்றுலோசித்தாலும் விதைக்கப்படவேண்டிய நிலம் குறைக்கப்படவேண்டுமானால், உதவி மாகாண ஏசண்டர் அவ்விதமாகக் குறைக்கப்பட்ட எவ்வளவு விசாலம் அல்லது வயல்கள் விதைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும். அப்போ அவ்வளவு விசாலம் மாத்திரம் விதைக்கக்கூடிய தண்ணீர் விடப்படும்.

9. வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இப்பிரமாணங்கள் செலுத்தப்படும். பிரமாணங்களை மீறுகை 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்கத்தையுடைய நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்திற் சொல்லியபடி தண்டனைக்குள்ளாக்கும்.

---

### வளவை நீர்ப்பாய்ச்சல் உபாயம்.

#### நீர்ப்பாய்ச்சல்த் தலைவரின் பிரமாணங்கள்.

1. விதைப்புக்காலங்களுக் கிடையில் நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்தஞ்செய்யவும் பராமரிக்கவும் பின்னுற் சொல்லப்படும் காலவிடைகள் வேண்டியதாயிருக்கின்றன. அக்காலங்களில் எந்த மதகுகளுக்கூடாகவேனும் அல்லது எந்தக் கால்வாய்களுக் கூடாகவேனும் வயல்களுக்குப் பங்கீடுசெய்வதற்காகத் தண்ணீர் விடப்படமாட்டா.

அக்கால விடைகளாவன:—

| | |
|---|---|
| "மகா" "யாலா" வேளாண்மைப் போகங்களுக்கிடையில் .. .. | 30 நாட்களும் |
| "யாலா" "மகா" வேளாண்மைப் போகங்களுக்கிடையில் .. .. | 40 நாட்களும் |
| ஆகக்கூடியது .. | 70 நாட்கள் |

நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அந்த அந்த விடத்து வேளாண்மைப் பிரமாணங்களால் அக்கால விடைகள் தொடங்கவேண்டிய சரியான திகதிகள் குறிக்கப்படும்.

2. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரின் கட்டளையின்படி குளங்களுக்குப் பாதுகாவலனு யிருப்பவரால் மதகுகளிலிருந்தும் இராசாங்க கால்வாய்களிலிருந்தும் தண்ணீர் வெளியாக விடுதல் பிரமாணப்படுத்தப்படவேண்டியது. அவ்வுத்தியோகத்தர் அல்லது அவ்வுத்தியோகத்தரால் பதிலாக நியோகிக்கப்பட்ட இன்னொருவரேயல்லாமல் மற்றையோர் ஒரு குளத்தின் மதகுகளில் அல்லது கால்வாய்களில் அல்லது அவைகளிலிருந்து வெளியே விடப்பட்ட தண்ணீரில் தலையிடுதல் கூடாது.

3. நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் இராசாங்கக் கால்வாய்களிலிருக்கும் மதகுகளிலிருந்து பங்கீடு செய்யப்படுந் தண்ணீர் பிரமாணப்படுத்தப்பட வேண்டும். அவ்வுத்தியோகத்தர் வெளியே விடப்பட்ட தண்ணீர் வீணிலே பாயாது தடுத்தற்குத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

4. தங்கள் தங்கள் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சற்குத் தேவையான சிறு கால்வாய்களின் பங்குகளை வெட்டுவித்தல் இராசாங்கக் கால்வாயால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரர்களின் கடனாகும். ஒவ்வொரு சொந்தக்காரனுக்கும் உரித்தாய் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலத்தின் ஏக்காத தொகைக்குத்தக்கபடி நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் ஒவ்வொரு சொந்தக்காரனால் கட்டுவிக்கப்பட வேண்டிய கால்வாய்களின் வழிகளும், பகுதிகளும் அவற்றின் விபரங்களும் தீர்மானிக்கப்பட வேண்டியது. எப்பொழுது எவ்விடத்தில் அவ்விதமான கால்வாய்கள் தேவையென்று மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் அறிவித்தல் செய்யவேண்டும்.

5. சிறு கால்வாய்கள் அல்லது வயற் கால்வாய்களால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்களின் சொந்தக்காரரால் அக்கால்வாய்கள் நல்ல நிலைபரத்தில் வைத்துப் பராமரிக்கப்பட வேண்டியது. அச்சொந்தக்காரர்களுக்கு ஒவ்வொரு

விதைப்புக்காலத்துக்கு முன்பாகத் தங்கள் தங்கள் கால்வாய்களைத் துப்பரவுசெய்வித்தலும் விதைப்பு முடிகிறவரையில் அவைகளைத் துப்பரவாக வைத்துப் பராமரித்தலும் கடமையாகும்.

யாதாமொரு சொந்தக்காரன் கால்வாய்களின் தனக்குரிய பங்கைத் துப்பரவுசெய்யத் தவறுங் காலத்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தர் மாகாண ஏசண்டருக்கு அல்லது உதவி மாகாண ஏசண்டருக்கு அவ்விதமான திருத்தம் அல்லது பராமரிப்பு ஆவசியகமென்று அறிவித்தல் செய்தால் அவ்வேசண்டர் அல்லது உதவி ஏசண்டர் அவ்வேலைகளைச் செய்வித்து அச்செலவைத் தவறிப்போன சொந்தக்காரனிடத்து அறவிடலாம்.

6. நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரின் கட்டளையின்றி யாதாமொரு கால்வாயிலேனும் அணைகட்டப்படக் கூடாது.

7. நீர்ப்பாய்ச்சல்க் கட்டளைச்சட்டத்தின் 56 (1) ம் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சல்த் தலைமைக்காரர்கள் அச்சட்டத்தின் 8 ம் பிரிவில் விதித்திருக்கும் பிரகாரம் தெரிவுசெய்யப்படவேண்டும். நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தரால் இராசாங்கக் கால்வாய்களால் அல்லது வேறு வழிகளால் கொடுக்கப்பட்ட தண்ணீரைத் தங்கள் தங்கள் பொறுப்பிலிருக்கும் வயல்களுக்கு அல்லது வயல்ப் பகுதிகளுக்குச் சரியாகப் பங்கிடுசெய்தல் அத்தலைமைக்காரரின் கடைமையாயிருக்கும். அவர்கள் மாகாண ஏசண்டர் அல்லது உதவி மாகாண ஏசண்டரின் ஆஞ்ஞையின் கீழிருப்பார்கள். அவ்வேசண்டர் அவர்களை வேலையினின்றும் நீக்கலாம்.

8. நீர்ப்பாய்ச்சலுக்காகத் தண்ணீர் சேமிக்கப்பட்டிருக்கு மிடங்களில் நீர்ப்பாய்ச்சல்த் தலைவருக்கு அல்லது அவரால் நியோகிக்கப்பட்ட அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தருக்குத் தண்ணீர் ஒரு போகத்துமேல் விதைக்கப் போதுமானதல்ல அல்லது போதுமானதாயிருக்கமாட்டாது என்று தோற்றினாலும், அல்லது ஒரு போகத்துக்குத் தானும் நீர்ப்பாய்ச்சக்கூடிய முழு நிலத்துக்கும் போதுமானதல்லவென்று தோற்றினாலும், அதுகாரணம்பற்றி விளம்பரஞ்செய்தல் ஆவசியகமென் றாலோசித்தாலும் விதைக்கப்படவேண்டிய நிலம் குறைக்கப்படவேண்டுமானால் உதவி மாகாண ஏசண்டர் அவ்விதமாகக் குறைக்கப்பட்ட எவ்வளவு விசாலம் அல்லது வயல்கள் விதைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்து அவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும். அப்போ அவ்வளவு விசாலம் மாத்திரம் விதைக்கக்கூடிய தண்ணீர் விடப்படும்.

9. வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தரால் இப்பிரமாணங்கள் செலுத்தப்படும். பிரமாணங்களை மீறுகை 1906 ம் ஆண்டின் 16 ம் இலக்கத்தையுடைய நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்திற் சொல்லியபடி தண்டனைக்குள்ளாக்கும்.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 620, N. P.**—1911 ம் ஆண்டு மாசிமாதம் 7 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில் வடமாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 10 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் யாழ்ப்பாணம், தென்மறாட்சி, பூனகரி, பச்சிலைப்பளிப் பகுதிகளிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,527. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | ஏக்கரொன்றுக்கு பாணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 13188 | வண்ணார்பண்ணை | ஏ. தம்பு | பீக்குளம் | 0 | 1 | 11 | 320 |
| | | பிளான் இலக்கம் 3,599. | | | | | |
| 13395 | சரசாலை | கந்தர்வீரகத்தியும் வேறு நால்வரும் கூட்டிச்சேர்த்த நிலம் | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 10 | 20 |
| | | பிளான் இலக்கம் 3,616. | | | | | |
| 13446 | மட்டுவில்நாடு | எஸ். சின்னையா கூட்டிச்சேர்த்தது | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 2·15 | 20 |
| 13447 | ஷை | எம். கனகசபை கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 2·50 | 20 |
| 13449 | ஷை | பீ. சரவணை கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 2·15 | 20 |
| 13451 | ஷை | எஸ். சின்னையா கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 1·75 | 20 |
| 13454 | ஷை | எஸ். சின்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | — | 0 | 0 | 22·50 | 20 |
| 13443 | ஷை | எம். கனகசபை கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 3·81 | 20 |
| 13445 | ஷை | எஸ். கந்தையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | ஷை | 0 | 0 | 3·31 | 20 |
| | | ஒடுக்குப்பணம்கட்டத்தவறிய நிலம். | | | | | |
| | | பிளான் இலக்கம் 3,570. உரித்தாளி—சின்னன் இளையவன் வாங்கின காணி. | | | | | |
| 13309 | சங்கத்தார் வயல் | — | தோட்டம் | 1 | 1 | 14 | 20 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணத்து கவுண்மேந்து ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஸ்ரீ மார்கழிமீ 20 ந் உ.

எச். எல். கிறவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

**No. 1,261, E. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 24 ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கிழக்கு மாகாணத்துக் கவண்மேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுவண்ணப்பட்டிருக்கும் பொருத்தப் பிரகாரம், ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள் கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கி விருக்கின்றன.

பிளான் இலக்கம் 4,171. கோறளைப்பற்று. • உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| *135 | பனிச்சங்கேணி | கடல்கரைக்காக விடப்பட்ட பூமி | — | 4 | 3 | 1 | — |
| 136 | பனிச்சங்கேணி | பொதுவிற்பனவு | தென்னைக்கேற்றகாடு | 3 | 2 | 4 | 16 |
| 137 | ஷை | ஷை | ஷை | 3 | 2 | 32 | 16·50 |
| *138 | ஷை | கடல்கரைக்காக விடப்பட்ட பூமி | — | 2 | 0 | 14 | — |
| *139 | ஷை | ஷை | — | 1 | 2 | 25 | — |

*விற்பனவிலன்று அடுத்தகண்டங்கள் கொள்பவர்களுக்கு கடற்கரைக்காக விடப்பட்ட பூமிகள் குத்தகைக்கு கொடுக்கப்படும்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 140 | பனிச்சங்கேணி | ப. சின்னமணியு மறுபேரும் | தென்னைக்கேற்றகாடு | 11 1 34 | 15·50 |
| *141 | ஷை | பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட பூமி | — | 0 3 30 | — |
| 142 | ஷை | பொதுவிற்பனவு | தென்னைக்கேற்றகாடு | 8 0 14 | 15·50 |
| *143 | ஷை | கடல்கரைக்காக விடப்பட்ட பூமி | — | 1 1 23 | — |
| *144 | ஷை | ஷை | ஷை | 2 2 12 | — |
| 145 | ஷை | அ. பேதுருப்பிள்ளை | தென்னைக்கேற்றபூமி | 10 0 0 | 17 |
| *146 | ஷை | ச. தோ பற்ணுந்து | ஷை | 11 1 12 | 17 |
| *147 | ஷை | கடல்கரைக்காக விடப்பட்ட பூமி | — | 2 0 12 | — |
| 148 | ஷை | ச. தோ. பற்ணுந்து | தென்னைக்கேற்றபூமி | 23 1 7 | 17·50 |
| *149 | ஷை | கடல்கரைக்காக விடப்பட்டபூமி | — | 2 1 23 | — |

படம் 1,672. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4875 | கல்குடா | பொதுவிற்பனவு | காடு | 16 3 32 | 15 |

படம் 4,006. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94504 | புணனை | பொதுவிற்பனவு | வெட்டைப்பூமி | 5 0 3 | 25 |

படம் 3,620. மண்முனைப்பற்று தென்பகுதி. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 92820 | மருங்கையடியூத்து | இ. உமறுகத்தா | வயல் | 7 2 0 | 15 |

உரித்தாளி—கூட்டிப்பிடித்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 92821 | ஷை | உ. சின்னத்தம்பி | வயல் | 0 1 5 | 15 |

உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 92822 | ஷை | க. செம்பாப்போடி | வயல் | 4 0 0 | 15 |

உரித்தாளி—கூட்டிப்பிடித்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 92825 | ஷை | க. செம்பாப்போடி | வயல் | 0 0 18 | 15 |

படம் 4,039. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94634 | புளுகுணவி | உ. காசின்வாவாப் போடி | காடு | 4 0 25 | 15 |

உரித்தாளி—கூட்டிப்பிடித்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94635 | ஷை | உ. காசின்வாவாப் போடி | வயல் | 2 0 16 | 15 |

படம் 4,102. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94899 | முனைக்காடு | கா. ஆறுமுகம் | தோட்டச்செய்கைக் கேற்ற காடு | 1 1 12 | 15 |

படம் 3,913. போரதீவுப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94018 | மண்டூர் | சி. பொ. த. சின்னப்புவும் மறுபேரும் | காடு | 13 3 10 | 15 |
| 94021 | ஷை | க. கந்தன் | காடு | 1 2 20 | 15 |

படம் 4,053. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94669 | தம்மலவத்தை | க. வயிரமுத்து | காடு | 6 2 12 | 15 |
| 94670 | ஷை | கா. மூத்ததம்பி | காடு | 4 1 12 | 15 |

படம் 4,122. உரித்தாளி—முடிக்குரிய.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 94940 | தம்பலவத்தை | பொதுவிற்பனவு | காடு | 1 0 21 | 15 |

*விற்பனவிலன்று அடுத்த கண்டங்கள், கொள்பவர்களுக்கு கடற்கரைக்காக விடப்பட்ட பூமிகள் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தீசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரை யவர்களிடம் விஞவி யறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஆம் மார்கழிமீ 9 ந உ.

எச். எல். கிறுவ்பொர்டு,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

**No. 1,262, E. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 26 ந் திகதி, வியாளக்கிழமை பகல் 1 மணிக்கு நீரோட்டுமுனை இஞ்சினீர் வங்களாவில் கீழ் மாகாணத்து திரிகோணமலை உதவி கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கிற பொருத்தட்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும். 34 காணித்துண்டுகள், கீழ்மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் தம்பலகமப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,133. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 94976 | சின்னக்கிணியா | காசீன் நகு | தென்னைக்கேற்றது | 3 2 30 | 16 |
| 94978 | ஷை | டிறுமான் உமறு | ஷை | 4 0 5 | 16 |
| 94980 | ஷை | ஷை | ஷை | 0 3 24 | 16 |
| 94981 | ஷை | — | ஷை | 0 3 7 | 16 |
| 94982 | ஷை | — | ஷை | 0 3 12 | 16 |
| 94983 | ஷை | — | ஷை | 0 3 1 | 16 |
| 94984 | ஷை | — | ஷை | 0 2 0 | 16 |

பிளான் இலக்கம் 3,751.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93532 | சின்னக்கிணியா | அப்துல்காதர் வாப்பு | தென்னைக்கேற்றது | 0 3 30 | 15 |
| 93533 | ஷை | ஆதம்வாவா காசீம் | ஷை | 1 2 6 | 15 |
| 93536 | ஷை | கே. அகமதுலெவ்வை | ஷை | 1 3 1 | 15 |
| 93539 | ஷை | — | ஷை | 2 2 5 | 15 |

பிளான் இலக்கம் 3,760.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93562 | பெரியகிணியா | ஏ. எல். அலிசா | காய்கனிக்கேற்றது | 1 3 2 | 15 |
| 93563 | ஷை | ஓ. வாப்புலெவ்வை | ஷை | 0 3 34 | 15 |
| 93564 | ஷை | யூ. முகம்மதுத்தம்பி | ஷை | 1 0 4 | 15 |
| 93565 | ஷை | ஏ. எல். மஹா[illegible] | ஷை | 0 3 28 | 15 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | பே. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,762. | | | | | |
| 93572 | பெரியகிணியா | இபிருயிம் செயினதீன் | தென்னைக்கேற்றது | 0 | 2 | 4 | 15 |
| 93573 | ஷை | ஷை | ஷை | 0 | 1 | 25 | 15 |
| 93574 | ஷை | ஏ. பெகாரி | ஷை | 0 | 2 | 26 | 15 |
| 93576 | ஷை | பீ. மினிங்கு | ஷை | 0 | 2 | 1 | 15 |
| 93577 | ஷை | ஷை | ஷை | 0 | 2 | 24 | 15 |
| 93578 | ஷை | ஏ. சீ. ஜேக்கப் | ஷை | 0 | 2 | 25 | 15 |
| 93579 | ஷை | எம். மஸ்தான் | ஷை | 0 | 3 | 30 | 15 |
| 93584 | ஷை | உதுமான் காசீம் | ஷை | 0 | 2 | 25 | 15 |
| | | பிளான் இலக்கம் 3,763. | | | | | |
| 93589 | பெரியகிணியா | எஸ். காசீம் | காய்கனிக்கேற்றது | 1 | 0 | 22 | 15 |
| 93590 | ஷை | ஷை | ஷை | 1 | 1 | 26 | 15 |
| 93591 | ஷை | எம். முகுதார் | ஷை | 1 | 0 | 24 | 15 |
| | | பிளான் இலக்கம் 3,997. | | | | | |
| 94458 | பெரியகிணியா | நூர்தீன் சரீப் | தென்னைக்கேற்றது | 0 | 0 | 37 | 15 |
| 94460 | ஷை | எஸ். எல். றகீம்லெவ்வை | ஷை | 3 | 1 | 10 | 15 |
| | | பிளான் இலக்கம் 3,998. | | | | | |
| 94462 | பெரியகிணியா | — | நெற்கேற்றது | 0 | 3 | 16 | 15 |
| 94463 | ஷை | எம். பீ. சலாப்தீன் | ஷை | 1 | 1 | 16 | 15 |
| 94465 | ஷை | எஸ். அகமதுலெவ்வை | ஷை | 3 | 1 | 15 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,097*. | | | | | |
| 94853 | தம்பலகமம் | எம். ஆலிம்சாய்புவும் நாலுபேரும் | நெற்கேற்றது | 18 | 3 | 4 | 17 |
| | | பிளான் இலக்கம் 4,154*. | | | | | |
| 42 | தம்பலகமம் | கே. கதிரவேலு | நெற்கேற்றது | 3 | 0 | 38 | 15 |
| | | பிளான் இலக்கம் 4,156. | | | | | |
| 53 | தம்பலகமம் | — | தென்னைக்கேற்றது | 0 | 3 | 27 | 15 |

*இந்த அடையாள மிடப்பட்ட படங்களிலுள்ள காணிகள் கந்தளாய்க் குளத்தால் தண்ணீர் பாய்ச்சக்கூடியதாய் வந்தவுடன் அரசாட்சியாரால் நியமிக்கப்படும் தண்ணீர்வரி கொடுக்கவேண்டுமென்ற பொருத்தனைக் கடக்கமாக விற்கப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி ஏசண்டரிடத்திலும் படங்களைப்பற்றிய விளம்பரங்கள் அளவைத்தலைவ ரிடத்திலுமிருந் தறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில், கொழும்பில், 1910 ம் ஸு மார்கழிமீ 13 ந் உ.

எச். எல். கிறுவ்பொர்டு, கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

**No. 1,263, E. P.**—1911 ம் ஆண்டு தைமாதம் 30 ந் திகதியாகிய திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கிழக்கு மாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டுக்களப்பு டிஸ்திறிக்கி லிருக்கின்றன.

பிளான் இலக்கம் 4,209. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
